# நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்



- **பெயர்**: வெ.இராமலிங்கனார்
- **பிறப்பு**: 19.10.1888
- **ஊர்**: மோகனூர், நாமக்கல் மாவட்டம்
- **பெற்றோர்**: வெங்கட்ராமன், அம்மணியம்மாள்
- **பணி**: கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர்
- **சிறப்புப் பெயர்**: காந்தியக் கவிஞர்
- **சிறப்பு**: தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர், பத்ம பூஷண் விருது
- **நூல்கள்**: மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள்
- **இறப்பு**: 24.8.1972
- **புகழ் பெற்ற மேற்கோள்கள்**:
    - 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'
    - ‘தமிழன் என்றோர் இனமுன்று
      தனியே அதற்கோர் குணமுண்டு'
    - 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா'
    - 'கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்
    - கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்

# உழவுப் பொங்கல்

பொங்குக பொங்கல் பொங்குகவே
புதுவளம் நிறைந்தறம் தங்குகவே!
எங்கணும் யாவரும் இன்பமுற
ஏர்த்தொழில் ஒன்றே தென்புதரும்.

உணவுப் பொருள்கள் இல்லாமல்
உயிரோ டிருப்பது செல்லாது;
பணமும் அதுதரும் நலனெல்லாம்
பயிர்கள் விளைப்பதன் பலனேயாம்.

உழவுத் தொழில்தான் உணவுதரும்
உடையும் அதனால் அணியவரும்
பழகும் மற்றுள தொழில் யாவும்
பயிர்த்தொழில் இன்றேல் விழலாகும்.

தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்
இங்கிதன் உண்மையை உணர்ந்திடுவோம்
ஏர்த்தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம்.

உழவே செல்வம் உண்டுபண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்.

ஏழையும் செல்வரும் இங்கிதமாய்
இசைந்துளம் களித்திடும் பொங்கல்இது
வாழிய பயிர்த்தொழில் வளம்பெருகி
வையகம் முழுவதும் வாழியவே.